Clr.No.19

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
------

IN THE COURT OF
Calendar :
Miscellaneous :
Preliminary Register : Case No. CC 109/2021
Sessions :
Prosecution புகார்தாரர்
Deposition of witness for : PW 1

Name .. திரு. சோம்நாத்

Father's Name .. திரு. சஞ்சய்குமார்
*Village*
Taluk ..
Caste ..
Calling ..
Religion ..
Age .. 18 Date : 06.01.2023
(Solemnly affirmed before this court under act X of 1969)

முதல் விசாரணை

1. நான் சடையன்குப்பம் பர்மா நகரில் வசித்து வருகிறேன். சிபிசிஎல் தொழில்நுட்ப கல்லூரியில் படித்து வருகிறேன். கடந்த 10.12.2020 அன்று என் நண்பர் நந்தா லிங்கேஷ் என்பவருக்கு பிறந்த தினம் என்பதால் அவருக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பதற்கு அவரிடம் தெரிவிக்காமல் எனது அப்பாவின் இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு திருவொற்றியூர் அஜாக்ஸ்க்கு மாலை சுமார் 05.30 மணிக்கு சென்றுக்கொண்டிருந்தேன். சரஸ்வதி நகர் 8வது தெரு அருகே நான் இருசக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது கருப்பு மற்றும் ஆரஞ்சு டியோ இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரிகள் 3பேரும் எதிரில் வந்தார்கள்.

2. எதிரிகள் மூவரும் என்னை வழிமறித்து கத்தியைக்காட்டி மிரட்டினார்கள். என் சட்டையில் இருந்த Vivo Y 30 என்ற கைபேசியை

பறித்து சென்றுவிட்டார்கள். பயத்தில் வீட்டிற்கு வந்து அம்மாவிடம் கூறினேன். மறுதினம் அப்பாவை அழைத்துக்கொண்டு சாத்தாங்காடு காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். ( **புகார் அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது கைபேசியை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கைப்பேசி என்னுடையது தான். (**கைப்பேசி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. மீண்டும் ஒருநாள் தேதி ஞாபகமில்லை, என்னை போலீசார் புழல் சிறைக்கு அழைத்துச்சென்று எதிரிகளை அடையாளம் காட்டுமாறு கூறினார்கள். 3 முறை மாற்றி மாற்றி நிற்க வைத்து அடையாளம் காட்டுமாறு கூறினார்கள். நான் அடையாளம் காட்டினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>** இல்லை